Registered as a News Paper · பக்கங்கள் 04 · விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM · PEOPLES DAILY · மக்கள் தினசரி

நாதம்: 02 · திருவள்ளுவர் ஆண்டு 2022 · புரட்டாதி 24 · (10-10-1991) · வியாழக்கிழமை · ஓசை: 234

## உலகில் 150 லட்சம் அகதிகள்

(வாஷிங்டன்)

உலகில் இன்று 150 லட்சம் மக்கள் அகதிகளாக வாழ்கின்றனர். அமெரிக்கா உட்படப் பல உலக நாடுகள் அகதிகளை இடம்பெயர்ந்து குடியமரும் மக்கள் என்று நம்புகின்றனர் என்று அமெரிக்க சர்வதேச மன்னிப்புச் சபையின் அகதிகள் திட்டப் பணிப்பாளர் நிக் றிசா தெரிவித்துள்ளார். 1990களில் அகதிகள் பிரச்சினை முக்கியமான மனிதப் பிரச்சினை என்று கூறும் அவர், அமெரிக்காவின் பொருளாதார நன்மைகளைப் பெறுவதற்காக அவர்கள் அமெரிக்காவுக்குக் குடிபெயரவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# தமிழருக்கு எதிரான போர் தொடரின்

# வடக்கில் இறைமையை அரசு இழக்கும்

### நம்பிக்கையில்லாப் பிரேரணை

## ஐந்து நாட்களின் பின்னர் மீண்டும் தாக்கலாகும்

(கொழும்பு)

ஐந்து நாட்கள் கழித்து மீளவும் நாம் அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவோம் என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

முன்னதாகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் காலவதியாகி விட்டது என்று கைவிடப்பட்டதைத் தொடர்ந்தே இந்தப் புதிய முயற்சி என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்பு கையளிக்கப்பட்ட தீர்மானத்தின் மீது நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறுவதை எதிர்க்கட்சிகள் பெரும்பாலும் விரும்பவில்லை என்று கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### நம்பிக்கையில்லா பிரேரணை

## விவாதம் முடியும் வரை சபைக்கு தலைமை தாங்கேன்

## . முகமட்

(கொழும்பு)

தமக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் முடிவடையும் வரை தாம் சபை நடவடிக்கைகளுக்கு ... னார். இதனை நேற்று பாராளுமன்றத்தில் உப சபாநாயகர் காமினி பொன்சேகா ...

## தலைமை அலுவலகத்திடம் தேவைகளைப் பெறவும்

### யாழ். அரசஅதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல அரச திணைக்களங்களும் தமது சேவையைத் தொடர்வதற்கு வேண்டிய சகல தேவைகளையும் தாமே தமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள வேண்டுமென்று யாழ். அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் போக்குவரத்து, தொலைத் தொடர்புகள் அற்ற காரணத்தால் தமது தேவைகளை அந்தந்த திணைக்களத் தலைவர்கள் நேரடியாக தமது தலைமை அலுவலகத்துக்குச் சென்று பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

## இன்று விவாதம்?

(கொழும்பு)

சபாநாயகர் எம். எச். முகமட் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று விவாதத்திற்கு எடுக்கவேண்டுமென அரசாங்கப் பாராளுமன்றக் குழு கோரியுள்ளது.

## சபாநாயகருக்கு ஆளும்கட்சி ஆதரவு

## டில்லிஅரசியல்அவதானிகள்ஆருடம்

(டில்லி)

சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்களை நடாத்தி ஒரு அரசியல் தீர்வுகாண முயற்சிகள் எடுக்காது, தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருமாயின் வடமாகாணம் புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டு, இப்பிரதேசத்தில் அரசு தனது இறைமையை முழுமையாக இழக்கவேண்டிய சூழ்நிலை உருவாகலாமென புதுடில்லி அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். சமாதானப் பேச்சுக்கள்மூலம் அரசியல் தீர்வகாண விரும்பாது, தமிழரின் பிரச்சினையைக் காலம் கடத்தி வந்தால் இலங்கைத்தீவு வடக்கு, தெற்கு என்றரீதியில் பிளவுபடும் ஆபத்துத் தோன்றுமென இந்த வட்டாரங்கள் அச்சம் தெரிவித்துள்ளன.

தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான ஒரு பூரண சுயாட்சித் திட்டமே ஒரு நியாயமான தீர்வாக அமையும் என்றும், இந்த சமஷ்டித் தீர்வை சிங்கள மக்களின் ம...

### வெளிநாடுகளில்

...சிலனை செய்யவேண்டிய சூழ்நிலை தோன்றிவருவதாகவும் புதுடில்லி அரசியல் அவதானிகள் மேலும் கருதுகின்றனர்.

கடந்த ஒன்றரை வருடங்களாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய இராணுவ நடவடிக்கைகளை சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டன போதிலும் அவர்களால் புலிகளின் பலத்தை அழித்துவிட முடியவில்லை. இறுதியில் இராணுவம் புலிகளை நகர்ப்புறத்தில் இருந்து பின்வாங்கச் செய்திருப்பினும் அவர்களின் நடமாட்டத்தையும், நடவடிக்கைகளையும் முற்றாகக் கட்டுப்பண்ண முடியவில்லை.

(4ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

நமக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் முடிவடையும் வரை நாம் சபை நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கப் போவதில்லையெனச் சபாநாயகர் எம்.எச். முகமட் அறிவித்துள்ளார். இதனை நேற்று பாராளுமன்றத்தில் உப சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற

(4ஆம் பக்கம் பார்க்க)

- முகமட்

## சபாநாயகருக்கு எதிரான விவாதமே நடத்தவேண்டும்

- வாசுதேவா

(கொழும்பு)

தற்போது முக்கியமானதும் அடிப்படையானதும் சபாநாயகர் எம். எச் முகமட்டின் நடத்தை குறித்த விவாதம் தான் என்றும், அரசுக்கு எதிரான தீர்மானம் அல்ல என்றும் நவசமசமாசக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார சபையில் தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிறுபிள்ளைத்தனமான அர. குற்றப் பிரேரணை

- ஸ்ரான்லி திலகரட்னா

(கொழும்பு)

"குழந்தைப்பிள்ளை விளையாட்டுப் போல் சுதந்திரக் கட்சியினர் கொண்டுவந்த அரசியல் குற்றப் பிரேரணை கடுமையான பாதகமான விளைவுகளுடன் அக்கட்சியை திருப்பி தாக்கியுள்ளது"

இவ்வாறு முன்னாள் சபா

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும்கட்சி ஆதரவு

[கொழும்பு]

சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது சபாநாயகருக்கு ஆதரவு தெரிவிக்கப்போவதாக அரசாங்கப் பாராளுமன்றக்குழு நேற்று ஏகமனதாகத் தீர்மானித்தது.

நேற்றுக் கூடிய அரசாங்கப் பாராளுமன்றக்குழு ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது சபாநாயகர் சரியான முடிவைமேற்கொண்டார் என்றும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

### அரசாங்க பாராளுமன்ற குழுவால்

## ஜயதிலக்கா, முத்துபண்டா கோரிக்கை நிராகரிப்பு

சபாநாயகர் எம். எச். முகமதுவுக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு அனுமதிக்கும்படி ஆரியதாசஜயதிலக்கா, எம்.ஏ. முத்துபண்டா ஆகியோர் எழுதியகடிதத்தைஅரசாங்கப் பாராளுமன்றக் குழுநிராகரித்துள்ளது.

இவ்விரு பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதிக்கு எதிரான இம்பீச்மெண்ட் மனுவில் தாம் கையெழுத்திட்டிருந்ததை அரசாங்கப் பாராளுமன்றக் குழுவிற்கு எழுதிய கடிதத்தில் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தியாளர்களுடன் தம்மை பகிரங்கமாக இனம் காட்டி வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தீர்வை சிங்கள மக்களின் மீ

வெளிநாடுகளில்

எதிராக பாரிய இராணுவ நடவடிக்கைகளை சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டுள்ள போதிலும் அவர்களால் நடவடிக்கைகளையும் முற்றாகக் கட்டுப்பண்ண முடியவில்லை.

(4ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தை மாசுபடுத்தவே நம்பிக்கையில்லாப் பிரேரணை

- பிரேமதாசா

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளால்கொண்டு வரப்பட்ட தற்பொழுதுசெல்லுபடியற்றதான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெளிநாடுகளில் குறிப்பாக இந்தியாவில் அரசாங்கத்தின் நற்பெயரை மாசுபடுத்து நோக்கம்கொண்டதாகும். ஆனால் அவர்களது முயற்சிகள் தோல்வி கண்டுவிட்டன என சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிராகக் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் விடுதலைப்புலிகளுக்கு அரசாங்கம் ஆயுதம் வழங்கியது என்ற போலியான குற்றச்சாட்டை முன்வைத்தன. ஆனால் இந்த நம்பிக்கையில்லாத தீர்மானத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமாவிற்கு ஈரான் பாராட்டு

(தெகிரான்)

பாலஸ்தீன மக்களின் நீதியான வீரப் போராட்டத்திற்கு சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா எடுத்து வரும் ஆதரவிற்கு ஈரான் இஸ்லாமியக் குடியரசின் அரசாங்கம் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய - தமிழீழப்போர் நான்காண்டு பூர்த்தி

[யாழ்ப்பாணம்]

இந்திய - தமிழீழப் போர் ஆரம்பமாகி இன்றுடன் நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி ஒமைதிப்படை என்ற பெயரில்வந்த இந்திய இராணுவம் தமிழீழத்தில் தனது இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தது எல்லோரும் அறிந்ததே.

ஒக்டோபர் 10ஆம் திகதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை நிராகரிப்பு

## தெற்கில் அரசியல் நெருக்கடி தணிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை செல்லுபடியற்றதாகிவிட்டது என்று உபசபாநாயகர் காமினிபொன்சேகா நேற்றுப் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

கடந்த இரு மாதங்களுக்கு மேலாகதென்னிலங்கையில்நிலவியஅரசியல் நெருக்கடி நிலை நேற்று அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை செல்லுபடியற்றதென உப சபாநாயகரின் அறிவித்தலைத் தொடர்ந்து பெருமளவு தணிந்தது.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மீது கொண்டுவரப்பட்ட குற்றவிசாரணை கோரும் மனுவுடன் ஆரம்பித்த அரசியல் நெருக்கடி அம்மனு நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்தும் நம்பிக்கையில்லாப் பிரேரணையும் செல்லுபடியற்றவை ஆகியதைத் தொடர்ந்து இத் தணிவு ஏற்பட்டது.

நேற்றுப் பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பெயரில் இரண்டாவது நிகழ்ச்சியாக இடம் பெற்றி

(4ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் சனிக்கிழமை 'வெளிச்சம்' வருகிறது

விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகம் வெளியிடும் கலை, இலக்கிய, சமூக இதழின் வெளியீட்டுவிழா எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் / இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது;

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வரவேற்புரை இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனும், வெளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

570693093V இலக்க அடையாள அட்டையும் வவுனியாவுக்கான பாஸும் உடுப்புக்கள் அடங்கிய கைப்பை (பிளாஸ்ரிக்வயர்பாக்) யுடன் பழைய முருகண்டிக்கும் புதிய முருகண்டிக்கும் இடையில் 5-10-91இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஓமந்தை வட்டச் செயலகத்தில் அல்லது இரணைமடுச்சந்தி உதயா கபே குமார் வசம் ஒப்படைக்கும்படி தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். கதிரவேலு கனகேஸ்வரன்.

(R/1822)

### மில்க்வைற் சலவைத் தூள் இனாம்.

சன்லைற், ஹைலாண்ட் மற்றும் பால்மா பக்கற்றுகள் பத்து நல்ல நிலைமையில் தந்து மில்க்வைற் சலவைத் தூள் 50 கிறாம் பக்கற் ஒன்று இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற். யாழ்ப்பாணம். (B/3272)

### வெள்ளைப் பிரம்பு தினம்

சர்வதேச கண்பார்வையற்றோர்களுக்கான வெள்ளைப் பிரம்பு தினம் கொண்டாடப் படவுள்ளது. எதிர்வரும் 15ம் திகதியே சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமாகும். இது தொடர்பாக இலங்கை கண் பார்வையற்றோர் சங்கம் கொடிவாரம் ஒன்றைக் கொண்டாடவுள்ளது.

### புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

*A/L 93*

ஆரம்பம்: 19-10-91
(8 மணி)

[ 100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்]

நிர்வாகி.
S. அருள்நங்கை

(B/3276)

## 90ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| வீர ஜனனம் | வீர மரணம் |
|---|---|
| 16 - 10 - 1973 | 13 - 07 - 1991 |



ஆனையிறவு இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியின்போது வீரமரணமடைந்த

### வீரவேங்கை சசி
### (சுப்பிரமணியம் குமரன்)

அன்னியன் கொத்தளம் அழிக்க
ஆனையிறவில் அணி திரண்டாய்
அன்னை மண் மீட்க சசி நீ
உயிர்தனை ஈந்து இயாகியாய் விட்டாய்
உனது இலட்சிய விதைகள்
இந்த மண்ணிலே முளைத்துப் பகைமை தரும்
உலகம் உள்ள வரைக்கும் உன் நாமம் நிலைக்கும்
எமது விழிநீரில் என்றுமே உன் உருவம் கதை சொல்லும்

''நெருப்பு உன்னை நெருங்கவில்லை. ஏனென்றால் நீயோ மலைச்சாரல் நீர்''

மண் மீட்பு முயற்சியில் மரணித்த மற்றைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

10.10 1991 இன்று வியாழக்கிழமை எமது வீட்டில் நடைபெறும் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், விடுதலைப் புலியினர் ஆகியோரை அன்புடன் அழைக்கின்றோம்.

அல்வாய் கிழக்கு,
அல்வாய். - குடும்பத்தினர்

(R/1823)

## 90-ம் நாள் நினைவஞ்சலி





## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வீர ஜனனம்
28 - 8 - 62

வீர மரணம்
10 - 10 - 88

மேஜர் தாடிபாலா
[சண்முகம் இராஜரத்தினம்]

## நினைவு சுமக்கின்றோம்...

1991 - 10 - 10



2-ம் லெப். மாலதி



2-ம் லெப். கஸ்தூரி



ரஞ்சினி

1987ஆம் ஆண்டு யாழ். கோட்டைப் பகுதியில் இந்தியப்படையினருடனான மோதலின் போது எறிகணைத்தாக்குதலினால் வீரமரணமெய்திய
(தமிழீழ - இந்தியப்போரின் களப்பலியான முதல் போராளி)
அன்ரன் (இரத்தினம் பரமேஸ்வரன் - வீமன்காமம், தெல்லிப்பளை)

இந்தியப்படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய
நிமல் (பொன்னையா பூபாலசிங்கம் - கெற்பெலி, மிருசுவில்)

கோப்பாயில் இந்தியப்படையினருடனான நேரடி மோதலில் காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய
(தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் படைப்பிரிவில் முதன்முதல் வீரமரணமடைந்த)
2ஆம்லெப். மாலதி (பேதுருசகாயசீலி - ஆட்காட்டிவெளி, மன்னார்)
தயா (செபஸ்ரியான் சலேற்றம்மா - பெரியநாவற்குளம், மன்னார்)

இதே பகுதியில் நேரடி மோதலில் வீரமரணமெய்திய
ரஞ்சினி (கதிரேசு யோகம்மா - ஓமந்தை, வவுனியா)
2ஆம்லெப். கஸ்தூரி (கோபாலபிள்ளை வதனீஸ்வரி - 765, ஹட்சன் வீதி வட்டக்கச்சி)

தெல்லிப்பளையில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த
விஷ்ணு (சுப்பையா விஷ்ணுமோகன் - மட்டுவில், சாவகச்சேரி)

யாழ். கோட்டைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

## மேஜர் தாடிபாலா

**[சண்முகம் இராஜரத்தினம்]**

நீர் எம்மைப் பிரிந்து மூன்று ஆண்டுகள்
மூன்று ஆண்டுகளென்ன - மூந்நூறு
ஆண்டுகளானாலும் மறப்பமோ
எங்கள் நெஞ்சில் நிழலாடும்
உம் நினைவுச் சுமைகளை!

அனந்தர்புளியங்குளம்,
புளியங்குளம்.

பெற்றோர்,
சகோதரர்கள்

[R/1712]

---

## 6ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்

வீர ஜனனம் 19 — 08 — 1961



வீர மரணம் 19 — 04 — 1991

மன்னார் பரப்புக்கடந்தான் நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த

**லெப். கேணல் கிறேசி**

திதி 10 - 10 - 1991

(R/1824) மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்மார்

---





## அளவையூர் தந்த வீரவேங்கைகள்

| வராகன் | ரமேஷ் |
|---|---|
| (சின்னத்துரை சர்வகுமார்) | (சின்னத்துரை சபேசன்) |
| அன்னையின் மடியில் 04 - 10 - 1972 | அன்னையின் மடியில் 16 - 12 - 1973 |
| தமிழ்த்தாயின் மடியில் 13 - 07 - 1991 | தமிழ்த்தாயின் மடியில் 14 - 07 - 1991 |

**திதி:- 10 - 10 - 1991**

சர்வகுமார் சபேசன் ஒருதாய்ப் பிள்ளைகள்
சாவிற்கு அஞ்சாத தமிழ்த்தாயின் மைந்தர்கள்
வீட்டிற்கு ஒரு புலி விரைகின்ற நேரம்
நாட்டைக்காக்கப் புறப்பட்ட வேங்கைகள்.
சர்வகுமாரெனும் வீரப்புலி வராகன்
சரித்திரப் போரினில் ஆனையிறவில் மாண்டான்
மறுநாளே அவன்தம்பி ரமேஷ் மணலாற்றில்
மறத்தமிழ் வீரத்தைக் காட்டியே சாய்ந்தான்.
புயலொன்று வீசுகையில் அளவையூர் பெற்ற
புகழ்வேங்கைச் சோதரர் மாவீரர் ஆயினர்
விடுதலைக் களத்தினில் உங்களின் சாதனைகள்
விடிவிற்கு முந்திய மரணத்தின் வேதனைகள்
எண்ணிப் பார்க்கின்றோம் ஏக்கத்தின் சோதனைகள்
என்றுமே பயில்வோம் வீரத்தின் போதனைகள்
பச்சிளம் பாலகரின் வரலாற்றுச் சிந்தனைகள்
பாடம் புகட்டிடும் வெற்றி குவிந்திடும்
பெற்றவர் மனங்களில் கவலைகள் நீங்கிடும்
மரணித்த மாவீரர் கனவு பலித்திடும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பெற்றோர்,
உற்றார், உறவினர்.

(B/3275)

---

**விஷ்ணு** (சுப்பையா விஷ்ணுமோகன் - மட்டுவில், சாவகச்சேரி)

யாழ். கோட்டைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1988ஆம் ஆண்டு வவுனியா கொந்தக்காரன் குளத்தில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

கப்டன் சைமன்/ராசா (தொ. அந்தோனி - அடம்பன்தாழ்வு, மன்னார்)
லெப். பீற்றர் (பிரான்சிஸ் யோகராசா - பரப்புக்கடந்தான், மன்னார்)
லெப். ஆனந் (இ. ரகு - குருமன்காடு, வவுனியா)
லெப். பார்த்தசாரதி (நடராசா யோகநாதன்-3ஆம்வட்டாரம், முள்ளியவளை)
மேஜர் தாடிபாலா (சண்முகம் இராசரத்தினம் - அனந்தர் புளியங்குளம், வவுனியா)
2ஆம்லெப். இரசதுரை/எம்.ஜி ஆர் (ம. அந்தோனிதாசன் - பரப்புக்கடந்தான், மன்னார்)
2ஆம்லெப். ஜெயந்தன் [பிலிப்பு பிரான்சிஸ் - நாவற்குளம், மன்னார்]
2ஆம்லெப். ராஜேந்தர் (மாரியப்பன் சிறிதரன்-பள்ளிக்குடியிருப்பு, மன்னார்)
2ஆம்லெப். றியாஸ் (சுப்பிரமணியம் விக்னேஸ்வரன்-நானாட்டான், மன்னார்)
2ஆம்லெப். கருணா (ச. யோகரட்ணம் - கன்னாட்டி, மன்னார்)
ரவிகாந்த் [அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் - பாப்பாமோட்டை, மன்னார்]
2ஆம்லெப். சிவா (எட்வேட் யோசப் - விவேகானந்தநகர், கிளிநொச்சி)

1990ஆம் ஆண்டு காங்கேசன்துறையில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

இந்திரன் (கனகரத்தினம் இந்திரவேல் - விளாங்கோடை, தெல்லிப்பளை கிழக்கு)

அச்செழுவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த

தயாளன் (துரைசிங்கம் சஜீவன் - சேகரம் வீதி, தையிட்டி, காங்கேசன்துறை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B,3285)

### ✵ சிந்தனைக்கு ✵

நேற்று அசாத்தியமாய் இருந்தது, இன்று சாத்தியமாகும் அற்புதத்தை ஒவ்வொருநாளும் நாம் கண்டு வருகிறோம்.

— மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 10-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2206
த.பெ.எண் 05

# சபாநாயகர் மீது நம்பிக்கையில்லை

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மீதான குற்றவிசாரணை மனுவை நிராகரித்ததன் மூலம் எதிர்க் கட்சியினரின் நம்பிக்கையை இழந்துள்ள சபாநாயகர் எம். எச். முகமட் தமது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ள அதேவேளை சபாநாயகர் எம். எச். முகமட் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றையும் பாராளுமன்றத்தில் கொண்டு வந்துள்ளனர்.

திரு. பிரேமதாசா மீதான குற்றச்சாட்டு மனுவில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் சபாநாயகரால் செல்லுபடியாகும் எனக் கருதப்பட்ட கையொப்பங்கள் திடீரென அவை எவ்வாறு செல்லுபடியாகாதவையாகப் போனது என்பதை விளக்கும் பொறுப்பு சபாநாயகருக்கு உண்டு என எதிர்க்கட்சிகள் கோருகின்றன. மேலும் சபாநாயகர் பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களின் கருதியைச் சந்தேகிக்கின்றார் என்பதும் எதிர்க்கட்சியினரின் பிரதான குற்றச்சாட்டாகும்.

சபாநாயகர் தமது கட்சியினருக்கு சாதகமான முடிவுகள் எடுக்கும்போது ஆதரிப்பதும், புகழாரம் சூட்டுவதும், தமக்கு எதிரான முடிவுகள் எடுக்கும்போது குறை கூறுவதும் விமர்சிப்பதும் எதிர்க்கட்சியினைப் பொறுத்தும், அரசாங்கக் கட்சியினைப் பொறுத்தும் வழமையான ஒன்றாகவே இருந்து வருகின்றன.

திரு பிரேமதாசா மீதான குற்ற விசாரணை மனுவை ஏற்றுக் கொண்டமை தொடர்பாகவும், இது தொடர்பாக திரு. பிரேமதாசாவுடன் முரண்பட்டுக்கொண்ட போதும் சபாநாயகருக்கு எதிர்க்கட்சிகள் பாராட்டும், புகழாரமும் சூட்டின. அதேவேளை ஆளும் கட்சியினர் சபாநாயகரைத் தூற்றினர் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட வேண்டும் எனவும் கோரினர். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் சபாநாயகர் குறித்து வெளியிட்ட செய்திகளுக்கு பத்திரிகைகள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என அதுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார். சில இடங்களில் சபாநாயகரின் பேச்சாளராக எதிர்க்கட்சியினர் மாறியதும் உண்டு.

பன்னிரண்டாயிரம்

# பயிலுநர் ஆசிரியருக்கான போட்டிப் பரீட்சைகள்

(கொழும்பு)

பன்னிரண்டாயிரம் பயிலுநர் ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்காக கல்விச்சேவைகள் ஆணைக்குழு போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது என ஆணைக்குழுவின் தலைவர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடு முழுவதும் 12.000 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன என்றும் இதில் விஞ்ஞானம், கணிதம் பயிலுநர் ஆசிரியர்களுக்கான 4000 வெற்றிடங்கள் உள்ளன என்றும் தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தூயகணிதம், பிரயோக கணிதம், விவசாய விஞ்ஞானம், பௌதீகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய பாடங்களில் ஓரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியெய்தியவர்கள் இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும்-

நவம்பர் 11 ஆம் திகதிக்குள் 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு கூடாதவராகவும் இருத்தல் வேண்டும் பட்டதாரி பயிலுநர் ஆசிரியருக்கு விண்ணப்பம் செய்பவர்கள் 40 வயதுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும் எனவும் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இப்பரீட்சை தொடர்பான விளக்கங்கள் 18ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளின் முதுகெலும்பு உடைக்கப்பட்டு விட்டது

(கொழும்பு)

- ஹமில்டன்

மொனராகலை மாவட்டத்தில் வாழும் சிங்கள கிராமவாசிகளுக்கு நவீனதன்னியக்க துப்பாக்கிகள் கையாள்வது உட்பட தீவிர ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக சிறிலங்கா இராணுவத்தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா தெரிவித்துள்ளார்.

லங்கா புவத் செய்தி நிறுவனத்திற்கு அளித்த விசேட பேட்டியில் அவர் மேலும், பாதுகாப்பு படையினர் விடுதலைப் புலிகளின் முதுகெலும்பை முறித்துவிட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

மேலும் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் உட்பட அனைவரையும் அழித்து ஒழிக்கும் காலம் வெகுதொலைவில் இல்லையெனவும் குறிப்பிட்டார். இடத்துக்கு இடம் சென்று மறைந்து வாழும் விடுதலைப் புலிகள் தலைவர்கள் பற்றி இடைக்கப்பெற்ற உளவறியும் தகவல்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருப்பதாகவும், விடுதலைப்புலிகள் வெற்றிலைக்கேணி யுத்தத்தில் சுமார் எழுநூறு பேரையும், மணலாற்றில் சுமார் நூறு பேரையும், அதற்கு முன்பாக சில வத்துறையில் சுமார் ஐந்நூறு பேரையும் இழந்துள்ளதாகவும் ஹமில்டன் வணசிங்கா தெரிவித்தார்.

# மாவீரர் தினத்தையொட்டி மரம் நாட்டும் இயக்கம்

(கொழும்புத்துறை)

எதிர்வரும் மாவீரர் தினத்தை முன்னிட்டுச் சகல சனசமூக நிலையங்களும் மரம் நாட்டும் இயக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்றும் சனசமூக நிலையத்தைச் சூழவுள்ள காணியில் 25 மரங்கள் நாட்ட வேண்டுமென்றும் இம்மரம் நாட்டும் பணியில் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலை

# விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்தும் மாவீரர் தினப் போட்டிகள்

21-11-91 தொடக்கம் 27-11-91 வரையில் நடைபெற இருக்கும் மாவீரர் தினத்தை ஒட்டி நடாத்தப்பட இருக்கும் கலைகலாசாரப் போட்டிகளில் எழுத்தாளர்கள் கலைஞர்கள் மற்றும் இத்துறையில் ஆர்வம் மிக்கோர் மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி, மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இப் போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெற உள்ளன.

1. கட்டுரை 2. நாவல் 3. சிறுகதை
4. கவிதை 5. சுவரொட்டி

இவற்றை ஆக்க விரும்புவோர் ஆக்கங்களை 25-10-91 க்கு முன்பு எமது பிரதேச மாவட்ட காரியாலயங்களிலும் அல்லது பத்திரிகைக் காரியாலயங்களில் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றோம்.

★ போட்டிகள் அனைத்தும் மாணவர்களுக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறும்.

★ தமிழீழத்தின் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ள இப் போட்டிகளில் ஆர்வம் ஆற்றல் மிக்க அனைவரும் கலந்துகொள்ளலாம்.

### போட்டிகளுக்கான விதிமுறைகள்

தமிழீழ மக்கள் அனைவரும் கலந்து கொள்ளக் கூடிய இப்போட்டிகளின் படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப்போரை அடிப்படையாகக் கொண்டும் அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும் சமகாலத்தில் எமது மக்களின் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட யதார்த்த தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண் மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த மாவீரர்களின் உணர்வுகளையும் இலட்சியத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதே போல் சுவரொட்டிகளின் கருப்பொருள்கள் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் நன்று. இலக்கியப் படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்.

சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்கு குறையாமலும் கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். சுவரொட்டிகள் யாவும் ஆட்போட்டில் 60 சென்ரிமீற்றர் X 40 சென்ரி மீற்றர் அளவு கொண்டதாக வண்ணப் படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகிக்கலாம்.) கறுப்பு வெள்ளைப் படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்களது படைப்புக்கள் அவர்களது பாடசாலை அதிபர்களால் அத்

நாயகர் குறித்து வெளியிட்ட செய்திகளுக்கு பத்திரிகைகள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என அநுர பண்டாரநாயக்கா தெரிவித்தார். சில நேரங்களில் சபாநாயகரின் பேச்சாளராக எதிர்க்கட்சியினர் மாறியதும் உண்டு.

தற்பொழுது நிலை தலைகீழாக மாறிவிட்டது குற்ற விசாரணை மனுவைத் தள்ளுபடி செய்ததையடுத்து எதிர்க் கட்சிகள் சபாநாயகர் மீது பெரும் சீற்றம் கொண்டுள்ளன. சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவில் உள்ள ஆத்திரத்தை விட சபாநாயகர் மீது எதிர்க்கட்சிகள் அதிக ஆத்திரம் காட்டுகின்றன.

சபாநாயகர் எம். எச். முஹம்மட் தமக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டதாக அவை கருதுகின்றன சபாநாயகரின் நடத்தையும் அதனை முற்று முழுதாகப் புறக்கணிப்பதாக இல்லை. இந்தியாவிற்குப் புறப்படும் முன் சபாநாயகர் இருந்தது போலன்று திரும்பி வந்தபின் இருக்கவில்லை என்பது மட்டும் உணரக் கூடியதாக உள்ளது.

சபாநாயகருக்கு பத்துக்கோடி ரூபா வழங்கப்பட்டமையால் அவர் தனது மனதை மாற்றிக் கொண்டார் என்பது போன்ற இன்னும் பல வதந்திகள் குற்றச்சாட்டுக்கள் குற்ற விசாரணை மனு நிராகரிப்புத் தொடர்பாக சபாநாயகர் பற்றி உலாவுகின்றது. சபாநாயகர் பற்றிய வதந்திகளில் உண்மை எந்தளவு, பொய் எந்தளவிற்கு என்பதைவிட சபாநாயகர் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதும் ஜனாதிபதி, சபாநாயகர் உறவில் நெருக்கம் ஏற்பட்டுள்ளது என்பதையும் மறுக்கமுடியாது.

ஆனால் இம்மாற்றம் அவர் ஏதாவது அழுத்தத்திற்கு உள்ளாகியதால் ஏற்பட்டதா? அல்லது இலாபம் ஏதும் ஈட்டியதால் ஏற்பட்டதா? அல்லது சுய சிந்தனையின் முடிவில் ஏற்பட்டதா என்பதை தற்பொழுது கண்டறிதல் இயலக்கூடிய காரியமல்ல.

இதேவேளை அரசாங்கக் கட்சியாயினும் சரிதான், எதிர்க்கட்சிகளாயினும் சரிதான், சபாநாயகராயினும் சரிதான், அவர்களின் நடவடிக்கைகள் சிறிலங்காவின் ஆட்சி அமைப்பு முறையை கேலிக்குரியதாக்கி வருகின்றன அரசியல்வாதிகள் அனைவரும் நாட்டின் நலன் என்பதை விட சொந்த இலாப நட்டக் கணக்குகளைப் பார்க்கும்போது இவை தவிர்க்க முடியாதவையாகின்றன இவை சிறிலங்காவில் மட்டுமல்ல மூன்றாம் உலகின் பொது நியதியாகவும் உள்ளன.

---

தினத்தை முன்னிட்டுச் சகல சனசமூக நிலையங்களும் மரம் நாட்டும் இயக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்று யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. கு...லா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒவ்வொரு வீட்டிலும் 5 மரங்கள் நாட்ட வேண்டு... 25 மரங்கள் நாட்ட வேண்டுமென்றும் இம்மரம் நாட்டும் பணியில் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாசமும் யாழ். மாவட்ட சம்மேளனமும் கூட்டாகச் செயற்பட வேண்டுமென்றும் அவர் கோரியுள்ளார். (24)

## திரிபுராவில் காங்கிரஸ் அரசாங்கம் நெருக்கடியில்

(டில்லி)

திரிபுராவில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் நெருக்கடி நிலை உருவாகியுள்ளது காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு வழங்கிய கட்சி ஒன்று ஆதரவை விலக்குவதாக அறிவித்ததைத் தொடர்ந்து இந்நிலை ஏற்பட்டது.

மாநில அரசாங்கத்தின் நிலைமையை மேம்படுத்துவதற்கான தனது கோரிக்கைகள் இந்த மாதத்திற்குள் நிறைவேற்றப்படாவிடில் அமைச்சரவையில் இருந்து விலகிக் கொள்வதான தனது நிலையை திரிபுரா உபஜாதி யுவ சமித்தி தொடர்ந்து வலியுறுத்துவதால் இந்திரா காங்கிரஸ் அமைச்சரவையில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

அறுபது உறுப்பினர் மாநில சட்டப் பேரவையில் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் 24 பேரும், திரிபுரா உபஜாதி யுவ சமித்தியின் 8 பேரும் இருக்கின்றார்கள்.

## பி. வி. நரசிம்மராவிற்கு எதிராக போட்டியிடுவதில்லையென தெலுங்கு தேசம் அறிவிப்பு

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேசத்தில் நந்தியால் லோக்சபாத் தொகுதியில் போட்டியிடவிருக்கும் பிரதம மந்திரி பி வி நரசிம்மராவிற்கு எதிராக வேட்பாளரை நிறுத்தப்போவதில்லை என தெலுங்கு தேசம் கட்சி அறிவித்துள்ளது.

கட்சியின் நிர்வாகக்குழு இதனைத் தீர்மானித்ததாக இக்கட்சியின் தலைவர் என். டி. ராமராவ் தெரிவித்தார்

நாட்டின் உயர் பதவியை வகிக்கும் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த நரசிம்மராவுக்கு மதிப்புக் கொடுக்கும் வகையில் இத்தகைய முடிவு எடுக்கப்பட்டது என்றும் என். டி ராமராவ் தெரிவித்தார்.

---

வரைந்து அனுப்பலாம்.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்களது படைப்புக்கள் அவர்களது பாடசாலை அதிபர்களால் அல்லது வகுப்பு ஆசிரியர்களால் அவர்களுடைய சொந்தப் படைப்பு என உறுதிப்படுத்தப்பட வேண்டும். போட்டிக்கான கட்டுரைகள் 3000 - 5000 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் நன்று போட்டிகளின் தீர்ப்பு தகுதி வாய்ந்த நடுவர் குழுவினால் எடுக்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

### மாணவர்களே!
### போட்டிகள் பற்றிய சிறப்பு விதிகள்

மாணவர்களுக்கான போட்டிகள், சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் ஆகிய விடயங்களில் நடைபெறும். இவை மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டதாக இருக்கும் ஓவியங்கள் 18X12 அளவு கொண்டதாக இருக்க வேண்டும். கட்டுரைகள் கீழ்வரும் அம்சங்களைக்கொண்டதாக இருக்க வேண்டும்

1. விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்
2. தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி
3. தமிழீழ மாணவர்களது கல்வியின் எதிர் காலம்
4. இன்றைய சூழ்நிலையில் மாணவர்களது சமூகப்பணிகள்
5. போராடுவதற்காகக் கற்போம்.

மேற்கண்ட தலைப்புகளில் கட்டுரைகள் 2,500 சொற்களுக்கு மேற்படாமல் வரைய வேண்டும் மாணவர்களுக்கான போட்டிகள் யாவும் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, ஆகிய பிரிவுகளாக நடைபெறும்.

1. 15 வயதுக்கு உட்பட்டோர் கீழ்ப்பிரிவு
2. 15 — 17 வயதுக்கு இடைப்பட்டோர் மத்திய பிரிவு
3. 17 வயதுக்கு மேற்பட்டோர் மேற்பிரிவு

**ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்**

# உலக வங்கியின் நிபந்தனைகளை நிராகரிக்க மலேசியா கோரிக்கை

(கோலாலம்பூர்)

உலக வங்கி செயற்படுத்தி இருக்கும் உதவி மற்றும் கடன்களுக்கான புதிய நிபந்தனைகளை நிராகரிக்குமாறு கொமன் வெல்த்தை மலேசியப் பிரதமர் மொகதிர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

நேற்று கோலாலம்பூரில் நடைபெற்ற கொமன்வெல்த் நிதியமைச்சர்களின் மாநாட்டை தொடக்கி வைத்துப் பேசிய மொகதிர் தங்கள் கடன்களைத் திருப்பிக் கொடுக்க இயலாத வளரும் நாடுகள் சிலவற்றின் பிரச்சினைகளைத் தடுப்பதற்கு உதவி மறுப்பு ஒரு வழியல்ல என்றும் ஆகவே உலக வங்கியின் நிபந்தனைகளை நிராகரிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக உலக வங்கி கடன்களை திருப்பிக் கொடுக்க முடியாத நாடுகளுக்கு உதவி நிறுத்தப்படும் என்று அறிவித்திருந்தது தெரிந்ததே.

பட்டப்படிப்புகள் கல்லூரி

## அறிவித்தல்

இதுவரை பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தவறியவர்களும், ஏற்கனவே பணம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யாதவர்களும் 10-10-91 வியாழக்கிழமை (இன்று) காலை 9 மணிக்கு தவறாது சமூகந் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உதவிப் பதிவாளர்,
பட்டப் படிப்புகள் கல்லூரி,
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B/3294)

## கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி.

மேற்படி எமது சங்கத்திற்கு பின்வரும் பதவிக்கு, கீழ்வரும் தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிப்போர் 'தலைவர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி' எனும் விலாசத்திற்கு தபாலின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் இடப்பட்டு 24-10-91 அன்று நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்து உறுதிப்படுத்தவும். கீழ்வரும் தகைமைகளுக்கு அமைவாக உள்ள விண்ணப்பங்கள் மாத்திரம் பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

### பொதுமுகாமையாளர்

### பதவிவெற்றிடம் (101/6)

சம்பள அளவுத்திட்டம் மாதம்:- 1305 — 60 x 04 75 x 11 — 2370ம் அங்கீகரிக்கப்பட்ட படிகளியாவும்.

01. கல்வித்தகைமைகள்:-

வொல்கா நதிக்கரையில்

## சோவியத் வாழ் ஜேர்மன் மக்களுக்கு ஒரு குடியரசு

(மாஸ்கோ)

வொல்கா நதிக்கரையில் சோவியத் யூனியனிலுள்ள ஜேர்மன் மக்களுக்கான குடியரசு ஒன்றை அமைப்பது பற்றி ஜேர்மனும் சோவியத் யூனியனும் கொள்கையளவில் இணங்கியுள்ளதாக தெரிய வருகிறது.

இதன்மூலம் ஸ்டாலின் ஆட்சிக்காலத்தின் போது மத்திய ஆசியப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட ஜேர்மன் மக்கள் மீண்டும் ஒரு குடியரசு ஒன்றை அமைக்க வழியேற்படவுள்ளது.

நம்பிக்கையில்லாப்

ருந்த அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுமாறு பிரதி சபாநாயகர் எதிர்க்கட்சித் தலைவியை கேட்டுக் கொண்டார்.

அப்போது பிரேரணையின் மீதான விவாதம் தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு நீடிக்க வேண்டும் என்ற யோசனையை பாராளுமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிராகரிக்கப்பட்டமையாகி தாம் பிரேரணையைச் சமர்ப்பிக்கப் போவதில்லை என்று சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறினார். அவர் மேலும் பேசுகையில் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முதலில் எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து சபைக்கு தலைமை தாங்கிய உப-சபாநாயகர் காமினி பொன்சேகா நம்பிக்கையில்லாப் பிரேரணை தற்போது செல்லுபடியற்றதாகிவிட்டது என அறிவித்தார்.

சபாநாயகருக்கு

எம். எச். முகமட் சபாநாயகராக இருக்கும் வரை அரசுக்கெதிரான தீர்மானத்தை எப்படி விவாதிக்க முடியும் என்றும் வாசுதேவ நாணயக்கார வினா எழுப்பியுள்

ஆதாரம் காட்டிப் பெறவும்

கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை நகர்ப்பகுதியிலுள்ள ஒரு கடை ஒன்றின் முன்னால் பணத்துடன் கூடிய பை ஒன்று கண்டு எடுக்கப்பட்டு வடமராட்சி மக்கள் முன்னணி பிரிவுச் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர். (18)

பிரேமாவிற்கு

ஈராணிய வெளியுறவு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே "ஆர். பிரேமதாசா பாலஸ்தீனரின் போராட்டத்திற்கு துணிச்சலுடன் நிலையாகநின்று ஆதரவளித்து வருவதனை ஈரான் மக்களும், அரசும் பாராட்டி மகிழ்ச்சி தெரிவிப்பதாக" குறிப்பிட்டுள்ளது.

தமிழருக்கு

ஆனையிறவு, மணலாறு ஆகிய பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை புலிகளுக்கு எதிராக நடத்திய போது சிறிலங்கா அரசாங்கம் குறிப்பிடுவது போன்று பாரிய வெற்றிகளை சிறிலங்கா இராணுவம் ஈட்டியதாகக் கொள்ள முடியாது. ஆனையிறவில் தமது நிலையைப் பாதுகாத்துக்கொள்ள இராணுவம் ஒரு மாதம் கடும் போர்புரிய வேண்டியிருந்ததெனவும், மணலாற்றில் இராணுவம் தனது குறிக்கோளை எட்டாமலே யுத்தத்தை முடிக்க வேண்டி வந்தது எனவும் அவர்கள் கருதுகின்றனர்.

அதேவேளை ஆனையிறவு, மணலாறு பகுதிகளில் விடு

## கடத்தப்பட்டார்

(டில்லி)

இந்தியாவுக்கான ருமேனியாத் தூதுவர் புதுடில்லியிலுள்ள அவரது வாசஸ்தலத்திற்கு சமீபமாக வைத்துக் கடத்தப்பட்டுள்ளார். சீக்கிய தீவிரவாதிகளால் இவர் கடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிசார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

ருமேனியாத் தூதுவரகத்தின் பொறுப்பதிகாரி காணாமல் போயுள்ளார் என்று புதுடில்லியிலுள்ள தூதுவரகம் அறிவித்துள்ளது.

ருமேனியாவில் கைது செய்யப்பட்ட சீக்கிய தீவிரவாதிகளை விடுவிப்பதற்கு பணயமாகவே ருமேனியத் தூதுவர் கடத்தப்பட்டிருக்கலாமென புதுடில்லியிலுள்ள இராஜதந்திரிகளும், சிரேஷ்ட அரசியல்வாதிகளும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அரசாங்கத்தை

தின் மீது விவாதிப்பதற்கு அரசாங்கம் சந்தர்ப்பத்தை அளித்த போது இந்தக் கட்சிகள் சபை மற்றும் மக்கள் முன்னிலையில் தமது பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டன.

மேலும் ஆயுதப்படைகளின் பிரதம தளபதியான ஜனாதிபதி மீதுள்ள நம்பிக்கையைப் பாதுகாக்கவும், நாட்டின் ஐக்கியம், இறைமை, ஒருமைப்பாடு என்பவற்றைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்து வரும் பாதுகாப்புப் படையினர் மத்தியில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சியிது எனவும் தெரிவித்தார். குழப்பம், அரசியல் நெருக்கடி என்பவற்றை ஏற்படுத்தி அவ்வாறானசூழ்நிலையை விடுதலைப் புலிகள் பயன்படுத்தச் சாதகமாகவே இது அமைந்துள்ளது. இவர்கள் மேற்கொண்டுவரும் அரசியல் பிரசார நடவடிக்கைகளானது நாட்டின் குழப்பத்தை ஏற்படுத்த முயலும் வெளிநாட்டு சக்திகளுக்குத் துணைபோவதாக அமைந்துள்ளது என்றும் பிரேமதாசா வர்ணித்துள்ளார்.

சிறுபிள்ளை

நாயகரும், கொழும்பு மாவட்ட சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஸ்டான்லி திலகரட்ண தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் எம். எச். முகமட்டின் தீர்ப்புப்பற்றி குறிப்

எதிர்வரும்

யீட்டுரை திரு பொன் பூலோகசிங்கமும் நிகழ்த்துகின்றனர். வெளிச்சம் பற்றிய ஆய்வுரை திரு சொக்கன் அவர்களும் சிறப்புரைகளை கவிஞர் இ. முருகையன், திரு ஆ. யேசுராசா, திருமதி கோகிலா மகேந்திரன் முதலியோரும் ஆற்றுகின்றனர்.

இவ்விழாவின் சிறப்பு நிகழ்ச்சியில் இயமண்ணுக்கு இலக்கிய சேவையாற்றிய முதுபெரும் எழுத்தாளர்களான அ. செ. முருகானந்தம், அல்லை ஆறுமுகம் ஆகியோர் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் கௌரவிக்கப்பட்ட பின்னர் திரு சி. கருணாகரன் அவர்கள் நன்றியுரை நிகழ்த்துவார். விடுதலைப் புலிகளின் முக்கியதலைவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கும் இந்நிகழ்ச்சிக்கு சகலரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியா

தாக்குதலின் முதல் கட்டமாக நிர்சனம் நிறுவனத்தின் ஒலிபரப்புக் கருவிகள் இந்திய இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து யாழ் மாவட்டத்தில் வெளிவந்து கொண்டிருந்த முரசொலி, ஈழமுரசு ஆகிய இரு தமிழ்ப்பத்திரிகை நிறுவனங்கள்மீது குண்டு வைத்து அவற்றைத் தகர்த்தது.

93 AL
★ விஞ்ஞானபாடங்கள் மட்டும்
ஆரம்பம்
19 - 10 - 1991
(சனி காலை 7 மணி)
★ எமது வழமையான ஆசிரியர் குழுவினால்
★ மாணவர்கள் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்கள் இடத்தை உறுதி செய்து கொள்ளவும்.
NEW
MASTER
INSTITUTE
Jaffna

சம்பள அளவுத்திட்டம் மாதம்:- 1305 — 60 x 04 75 x 11 — 2370ம் அங்கீகரிக்கப்பட்ட படிகளையாவும்.

01. கல்வித்தகைமைகள்:-

அ. கூட்டுறவு ஊழியர் 7ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்தில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 08வது சம்பளத்திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்தில் ஆறு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

'அல்லது'

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அதற்கிணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப தாபனமொன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் நான்கு வருடத்திலான அனுபவம்.

'அல்லது'

இ. கூட்டுறவுப் பணியாளர் உயர் பிரிவு தராதரப் பத்திரம் அல்லது க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

02. வயது:- 25 தொடக்கம் 50 வரை

## முக்கிய குறிப்புகள்:-

01. சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களினதும், அனுபவச் சான்றிதழ்களினதும், கல்விச் சான்றிதழ்களினதும், பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களினதும் போட்டோப் பிரதிகள் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

02. மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்போரின் தகைமையுடையவர்களுக்கு 06-11-1991 முற்பகல் 10.00 மணிக்கு நேர்முகப் பரீட்சை எமது சங்கக் காரியாலயத்தில் (கண்டி வீதி, கிளிநொச்சி) நடைபெறும்.

**சி. இராசகுலசிங்கம்**
தலைவர்,
கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி. 05 - 10 - 91

(B/3286)

யகராக இருக்கும் வரை அரசுக்கெதிரான தீர்மானத்தை எப்படி விவாதிக்க முடியும் என்றும் வாசுதேவ நாணயக்கார வினா எழுப்பியுள்ளார்.

### விவாதம்

நடவடிக்கைகளுக்கு உப சபாநாயகர் காமினி பொன்சேகாவே தலைமை தாங்கினார். அப்போது சபாநாயகர் எம். எச். முகமட் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான அறிவித்தலை எதிர்க்கட்சியினர் சமர்ப்பித்தனர்.

மலே யுத்தத்தை முடிக்க வேண்டி வந்தது எனவும் அவர்கள் கருதுகின்றனர்.

அதேவேளை ஆனையிறவு, மணலாறு யுத்தங்களில் விடுதலைப் புலிகள் கடைப்பிடித்த யுத்த முறைகள் முன்பு கடைப்பிடித்த முறைகளை விட மாறுபட்டவை என்றும் இந் நிலையில் இராணுவ நடவடிக்கை மூலம் வடக்கை புலிகளிடம் இருந்து மீட்பதோ அல்லது பராமரிப்பதோ சிறிலங்கா இராணுவத்தால் இலகுவில் மேற்கொள்ளப்படக் கூடிய காரியம் இல்லை எனவும் அவை தெரிவித்துள்ளன.

சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஸ்டான்லி திலகரட்னா தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் எம். எச். முகமட்டின் தீர்ப்புப்பற்றி குறிப்பிட்டபோதே இவ்வாறு கருத்துத்தெரிவித்தார்.

MASTER
INSTITUTE
Jaffna
(B-3280)

# 6 ஆம் மாத நினைவஞ்சலி



வீரஜனனம் : 20 - 04 - 1972

வீரமரணம் : 10 - 04 - 1991

## வீரவேங்கை லெப். ரகுராம்

(பழனிவேல் நந்தவரதன்)
குலனையூர்

ஈழம் எனும் தமிழ் நாட்டினிலே
வயல்களால் சூழ்ந்த அராலி தனில்
குலனையூர் எனும் ஊரினிலே
வாழ்ந்து முடிந்தானே.

''ரகுராம்'' எனும் பழனிவேல் -நந்தவரதன்
அஞ்சா நெஞ்சம் கொண்டவனுக்கு
அஞ்சலி செலுத்திடுவோம்.

ஈழம் தனில்
அன்பு இதயங்கள்

(B/3292)

# 90 ஆம் நாள் வீரஅஞ்சலி

வீர ஜனனம் 15-10-73



வீர மரணம் 10-07-91

ஆனையிறவு முகாம் தகர்ப்பின் போது
வீரமரணமடைந்த

## 2ஆம் லெப்டினன்ட் அமராவதி

(பாலசிங்கம் நளா)

தமிழ்மண்ணை மீட்டெடுக்க
உன் உயிரையே அர்ப்பணித்தாய்
தமிழீழம் மலர்ந்திடவே
தன்மானம் காக்கப் புறப்பட்டாய்
ஆனையிறவிலே சமர்புரிந்த வீராங்கனை
சரித்திரமாகிவிட்ட தமிழ் மகளே அமராவதி
நிலத்தையே அந்நியர் அழிக்க
வந்த போது அவர்கள்
குலத்தையே அழிக்கப் புறப்பட்ட
சோமகளே உன் பணி நாம் தொடர்வோம்

இவருடன் வீரமரணம் அடைந்த அனைத்துப்போராளிகளுக்கும் எமது வீர அஞ்சலிகள்!

இரணைக்கேணி
குச்சவெளி
திருமலை

தாய், சகோதரசகோதரிகள்
உற்றார், உறவினர், நண்பர்கள்
தகவல் R. ராபு

(B/3282)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.